



Metro லீடர்

# மெட்ரோ LEADER

தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'

CN ceynews

www.ceynews.lk

லீடர்: 03 | இதழ் -262 | 10.02.2023 | பக்கங்கள்: 06 | editorml21@gmail.com | விலை: 50/-


# திட்டமிட்டபடி தேர்தல்

## நீதிமன்றின் அதிரடி உத்தரவு



இலங்கையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை திட்ட மிட்டவாறு நடத்துமாறு தேர்தல் ஆணைக்குழுவுக்கு உயர்நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

நாட்டில் பாரிய பொருளா தார நெருக்கடி நிலவும் நிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை 02 ⏭

# துருக்கி நிலநடுக்கம்: 23 ஆயிரத்தைக் கடந்த உயிரிழந்தோர் எண்ணிக்கை!



துருக்கி மற்றும் சிரியாவில் ஏற்பட்ட தொடர் நிலநடுக்கங்களால் ஆயிரக்கணக்கான கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமாகி உள்ளன. பல்வேறு நாடுக ளின் ஆதரவுடன் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

இடிபாடுகளில் இருந்து கொத்துக்கொத்தாக 02 ⏭

# தேசியவாதமே குற்றவாளிகளின் இறுதி இடம் - ரவூப் ஹக்கீம்



தேசியவாதமே குற்றவாளிகளின் இறுதி தளம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தில் இன்று (10) பங்கேற்று உரையாற்றிய அவர், 13ஆவது அரசியலமைப்பு தொடர்பில் 02 ⏭

# கல்வியற் கல்லூரிகளில் கிறிஸ்தவ இஸ்லாம் பாடத்திற்கு மாணவர்களை உள்ளீர்ப்பதில் அநீதி! நீதிக்கான மய்யம் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு




கல்வியற் கல்லூரிகளில் கிறிஸ்தவ மற்றும் இஸ்லாம் பாடத்திற்கு மாணவ ஆசிரியர் களை உள்ளீர்ப்பதில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இதனை சுட்டிக் காட்டி கல்வி அமைச் சின் செயலாள ருக்கு எதிராக நீதிக்கான மய்யம் கொழும்பி லுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழவில் புதன்கிழமை (08) முறைப்பா டொன்றினை செய்துள்ளது.

இம்முறைப்பாட்டினை நீதிக் கான மய்யத்தின் தலைவர் சட்டத்தரணி சஹ்பி எச். இஸ்மாயில், 02 ⏭

# சமஷ்டி கோருவது, பௌத்த பிக்குகளை தூண்டிவிடும் செயலாகும்:

-முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன-



நீண்ட காலமாக நீடித்துவரும் அதிகாரப் பகிர்வு தொடர்பாக, நாட்டிலுள்ள அரசியல்வாதிகள், புத்திஜீவிகள், மதகுருமார்கள் ஒன்றிணைந்து பேச்சு வார்த்தையின் ஊடாக சிறந்த தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பி னர் மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்து ள்ளார்.

யுத்தத்தை ஆரம்பிப்பார்கள் என்றும் ஜே.வி.பியினர் 02 ⏭

# இலங்கையிலும் நிலநடுக்கம்




வெல்லவாயவில் 3 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சேதம் ஏற்படாததால் மக்கள் அச்சம் கொள்ள வேண்டாம் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது,

## திட்டமிட்டபடி தேர்தல்...

நடத்துவதால் நாட்டுக்கோ, பொதுமக்களுக்கோ எந்தப் பயனும் ஏற்படாது எனத் தெரிவித்து ஓய்வுபெற்ற இராணுவ கேணல் டபிள்யூ.எம்.ஆர். விஜேசுந்தரவினால் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதனையடுத்து அது தொடர்பில் இடம்பெற்ற வழக்கு விசாரணைகளின் தொடர்ச்சியாக இன்றைய தினமும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன் போதே தேர்தலை திட்டமிட்டவாறு நடத்த வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தேர்தலை தடுக்க தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தரவிடுமாறு கோரிக்கை விடுத்து, அண்மையில், ஓய்வுபெற்ற இராணுவ கேணல் டபிள்யூ.எம்.ஆர். விஜேசுந்தரவினால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இடைநிறுத்த உத்தரவிடுமாறு கோரி ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது

## துருக்கி நிலநடுக்கம்...

சடலங்கள் மீட்கப்படுவதால் உயிரிழப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்நிலையில், நிலநடுக்கத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 23 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

இடிபாடுகளில் சிக்கி பலத்த காயங்களுடன் உயிருக்குப் போராடுபவர்கள் மீட்கப்பட்டு அவர்களுக்கு தேவையான மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இடிபாடுகளில் இருந்து மேலும் பலரை மீட்கும் பணிகளில் மீட்புப் படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

நிலநடுக்கத்ததால் வீடுகளை இழந்தவர்களில் பலர் அரசு அமைத்துள்ள கூடாரங்கள், மைதானங்கள் மற்றும் பிற தற்காலிக தங்குமிடங்களில் தங்கியிருக்கின்றனர். இந்தியா உட்பட 12க்கும் மேற்பட்ட நாடுகள் தங்கள் நாடுகளின் பேரிடர் மீட்பு படைகளையும், நவீன இயந்திரங்களையும், ஆம்புலன்ஸ் வாகனங்களையும், மருந்து பொருட்களையும், மோப்ப நாய்கள் அடங்கிய வல்லுனர் குழுவையும் அனுப்பி வைத்துள்ளன.

அந்த வகையில் 1.10 இலட்சத்துக்கு மேற்பட்ட மீட்புப் படையினர் நிலநடுக்கம் பாதித்த பகுதிகளில் போர்க்கால அடிப்படையில் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் உழவு இயந்திரங்கள், கிரேன்கள், புல்டோசர்கள் உட்பட சுமார் 6 ஆயிரம் வாகனங்கள் களத்தில் உள்ளதாக துருக்கி பேரிடர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

## தேசியவாதமே குற்றவாளிகளின்...

மேற்கொள்ளப்படும் எதிர்ப்புகளை விமர்சித்தார். உரிமைகளுக்காக ஆயுதம் ஏந்தி பின்னர், அதனை கைவிட்டு பாராளுமன்றத்துக்கு வந்துள்ள தர்மலிங்கம் சித்தார்த்தன் இன்று பாராளுமன்றில் தமிழில் உரையாற்றியபோது, அவருடைய உணர்வுகளை பாராளுமன்றில் உள்ள எத்தனை பேர் புரிந்துக்கொண்டார்கள் என அவர் கேள்வி எழுப்பினார்.

அதேநேரம் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் பிரிக்கப்படாத நாட்டில் அதிகாரப்பரவாலக்கத்தை கோருகிறது. எனினும் தொடர்ந்தும் பழைய வரலாற்றையே கூறிக்கொண்டிருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை தற்போதைய சூழ்நிலையில் இந்தியா, இலங்கைக்கு 4 பில்லியன் டொலர்கள் என்ற பாரிய உதவியை அளித்துள்ளது. அத்துடன் 1987 ஆண்டில் இலங்கையின் இறைமைக்காக இந்திய அமைதிப்படையினர் தமது உயிர்களை அர்ப்பணம் செய்தனர். எனினும் பலர் இன்று இந்தியாவை குற்றம் சுமத்திக்கொண்டிருக்கின்றனர்.

இந்தநிலையில் தேசியவாதமே குற்றவாளிகளின் இறுதி இடம் என்று ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

## கல்வியற் கல்லூரிகளில் கிறிஸ்தவ, இஸ்லாம்...

சிரேஷ்ட சட்டத்தரணி சுகந்திகா பெர்ணான்டோ, நீதிக்கான மய்யத்தின் செயலாளர் கலாநிதி றியாத் ஏ. மஜீத், பிரதித் தலைவர் யூ.கே.எம்.றிம்சான் ஆகியோர் இணைந்து செய்துள்ளனர்.

இது குறித்து நீதிக்கான மய்யத்தின் தலைவர் சட்டத்தரணி சஹ்பி எச். இஸ்மாயில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

கடந்த பல வருடங்களாக கிறிஸ்தவ, இந்து, இஸ்லாம் சமய பாடநெறிகளுக்கு கல்வியல் கல்லூரிகளுக்கு சமமான எண்ணிக்கை கொண்ட மாணவர்கள் உள்ளீர்க்கப்படுவது வழக்கமாக இருந்து வந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் தமிழ் மொழி மூலமாக இந்து, கிறிஸ்தவ, மற்றும் இஸ்லாம் பாட நெறிகளுக்கு கல்வியல் கல்லூரிகளில் 30 மாணவர்கள் உள்ளீர்ப்பு செய்யப்பட்டனர். 2016, 2017 ஆண்டுகளிலும் மூன்று பாடநெறிகளுக்கு சமமானவர்களை உள்வாங்க பட்டிருந்தனர்.

2022 ஆம் ஆண்டு கல்வியல் கல்லூரிகளுக்கு மாணவர்களை உள்வாங்கும்போது இந்து சமய பாடத்திற்கு 20 மாணவர்களையும், இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ பாட நெறிகளுக்கு தலா 10 மாணவர்களை மாத்திரம் உள்வாங்க இருப்பதாக வர்த்தமானியில் கல்வி அமைச்சு அறிவித்தல் வழங்கியுள்ளது.

இது இஸ்லாம், கிறிஸ்தவ பாடநெறிகளை தொடர்வதற்கு எதிர்பார்த்துள்ள மாணவர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட ஒரு அநீதியாகும். அண்மையில் கல்வி அமைச்சு சப்ரகமுவா மாகாணத்தை தவிர்ந்த அனைத்து மாகாணங்களிலும் மற்றும் தேசிய பாடசாலைகளில் தமிழ் மொழி மூலமான இஸ்லாம் பாட ஆசிரியருக்கு வெற்றிடம் இருப்பதாக கூறியுள்ள இந்நிலையில் இஸ்லாம் பாடநெறிக்கு இம்முறை கல்வியல் கல்லூரியில் 10 மாணவர்களை மாத்திரம் அனுமதி வழங்க இருப்பது பாரிய சந்தேகத்தை எழுப்புகின்றது. 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மௌலவி ஆசிரியர் நியமனம் வழங்கப்படாததும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

கிறிஸ்தவ பாடநெறியை பொறுத்தவரை கல்வி அமைச்சரின் அண்மைய வர்த்தமானியில் பல மாகாணங்களில், தேசிய பாடசாலையில் தமிழ்மொழி மூலமாக கிறிஸ்தவ ஆசிரியருக்கு வெற்றிடம் இருப்பதாக கூறி இருக்கும் நிலையில் மேலும் கிறிஸ்தவ பாடமானது ரோமன் கத்தோலிக்கம், கத்தோலிக்கம் அல்லாத கிறிஸ்தவம் என இரண்டாக பிரிந்து காணப்படும் நிலையில் இலங்கையில் உள்ள பல பாடசாலைகளில் இப்பாட ஆசிரியருக்கான வெற்றிடங்கள் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்படி விடயம் தொடர்பாக உடனடி விசாரணை ஒன்றை நடாத்தி கல்வி அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை திருத்தம் செய்து இஸ்லாம் கிறிஸ்தவ பாட நெறிகளுக்கு அதிகமான மாணவர்களை உள்ளீர்ப்பு செய்ய ஆலோசனை வழங்குமாறு முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## சமஷ்டி கோருவது பௌத்த பிக்குகளை...

அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்யவுள்ளார்கள் என்றும் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தன.

இவ்வாறான சவால்களுக்கு மத்தியில்தான், முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.

இந்த நிலையில், தமிழ் அரசியல்வாதிகள் சமஷ்டியைக் கோருவதானது, பெரும்பான்மையின மக்களையும், பௌத்த பிக்குகளையும் தூண்டிவிடும் செயலாகவே நாம் பார்க்கிறோம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, 13 பிளஸை தருவதாக ஐ.நா.வின் முன்னாள் செயலாளர் பான் கீ மூனுக்கு உறுதியளித்தார். பசில் ராஜபக்ஷவும் இந்தியாவுக்கு 13 பிளஸை தருவதாக உறுதியளித்தார்.

இவ்வாறான உறுதி மொழிகளுக்குப் பின்னர்தான், இந்தப் பிரச்சினை நாட்டின் பூதாகரமானது. 87 களுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த எந்தவொரு அரசாங்கமும், மாகாணசபை முறைமை வெற்றியா? தோல்வியா? என ஆராயவில்லை.

நீண்ட காலமாக நீடித்துவரும் இந்தப் பிரச்சினைக்கு, வடக்கு – கிழக்கு – தெற்கு அரசியல்வாதிகள், புத்திஜீவிகளை, மதகுருமார்களை ஒன்றிணைத்து சமாதானமானதொரு தீர்வை வழங்க வேண்டும்.

இதைவிட பாரிய பிரச்சினைகள் உலக நாடுகளில் ஏற்பட்டபோது, பேச்சுவார்த்தைகளின் ஊடாக அவை தீர்க்கப்பட்ட வரலாறுகள் உள்ளன.

எனவே, இந்தப் பிரச்சினையை பேச்சுவார்த்தையின் ஊடாக நிச்சயமாக தீர்க்கலாம் என நாம் உறுதியாக நம்புகிறோம் எனத் தெரிவித்துள்ளார்.

# 75 மாணவர்களுக்கு உயர் கல்விக்கான புலமைப் பரிசில் CMT Campus வழங்கியது!

எம்.எம்.அஸ்லம்

நாட்டின் 75 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு CMT Campus (சி.எம்.ரி.கெம்பஸ்) 75 மாணவர்களுக்கு உயர் கல்விக்கான புலமைப் பரிசில்களை வழங்கியுள்ளது.

சுதந்திர தின விழா மற்றும் புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு என்பன கெம்பஸின் கல்முனை அலுவலகத்தில் அதன் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் றிஸ்டி ஷரீப் தலைமையில் இடம்பெற்றபோது இவர்களுக்கான புலமைப் பரிசில் பத்திரங்கள் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டன.

இதில் கெம்பஸ் தவிசாளரும் முன்னாள் கிழக்கு மாகாண சபையின் குழுத் தலைவருமான கலாநிதி ஏ.எம்.ஜெமீல் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப், கல்முனை இராணுவ முகாமின் இரண்டாவது கட்டளைத் தளபதி மேஜர் தர்சன தரங்க, பெரிய நீலாவணை விஷேட அதிரடிப்படை முகாமின் பொறுப்பதிகாரி ஆர்.ஏ.டி.எஸ். ரத்னாயக்க ஆகியோர் கௌரவ அதிதிகளாக பங்கேற்றிருந்தனர்.

பல்கலைக்கழக வாய்ப்புக் கிடைக்காத, பொருளாதார வசதி குறைந்த மாணவர்களும் பட்டப்படிப்புகளை மேற்கொள்ளும் பொருட்டு தேசிய பல்கலைக் கழகங்களுக்கு நிகராக கிழக்கு மாகாணத்தில் தனியார் பல்கலைக் கழகம் ஒன்றை அமைப்பதற்கான இலக்கை நோக்கி சீ.எம்.ரி.கெம்பஸ் பயணிப்பதாக அதன் தவிசாளர் ஏ.எம்.ஜெமீல் தனதுரையில் குறிப்பிட்டார்.

கடந்த 20 வருடங்களாக இப்பிராந்தியத்தில் நம்பகத்தன்மையுடன் இயங்கி வருகின்ற இக்கல்வி நிறுவனம் தற்போது மலேசியாவின் மலாக்கா பல்கலைக்கழகத்துடன் கூட்டிணைப்பு செய்யப்பட்டு, தனது கல்விப் பணியை உத்வேகத்துடன் முன்னெடுத்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர்களான எம்.எச்.தௌபீக், ஏ.ஜௌபர், போன்றோருடன் மேற்படி உயர் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர்களான எம்.ஏ.நளீர், பி.எம்.நளீம் முகைடீன் உள்ளிட்டோரும் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் தேசியக் கொடியேற்றப்பட்டு, தேசிய கீதம் இசைக்கப்பட்டதுடன் நாட்டுக்காக உயிர்நீத்த படை வீரர்களுக்காக 02 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.











# சம்மாந்துறையில் 45 நாட்களாக பாடசாலைக்கு செல்ல முடியாமல் தவிக்கும் மாணவர்கள் - முறைப்பாடுகள் செய்தும் இதுவரை தீர்வில்லை

ஏ.எல்.எம். ஷினாஸ்

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை கல்வி வலயத்திற்குட்பட்ட ஜமாலியா வித்யாலயத்தில் கல்வி கற்கும் ஒன்பது மாணவர்கள் கடந்த 45 நாட்களாக பாடசாலைக்கு சமூகமளிக்க முடியாமல் தமது கல்வியை இழந்த நிலையில் நிர்கதியாகியுள்ளனர். இந்த மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் கல்வி உரிமையை வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தவறிழைத்து உள்ளார்கள் என மாணவர்களின் பெற்றோர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்டுள்ள பெற்றோர்கள் ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் மாநாடு (06) சம்மாந்துறையில் நடைபெற்றது. இதன் போது பெற்றோர்கள் தமது கருத்துக்களை தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பாடசாலையின் முன்னாள் அபிவிருத்தி சங்க செயலாளர் எம்.ஐ.எம்.றிஸ்விகான் கருத்து தெரிவிக்கும் போது,

சுமார் ஒரு வருடங்களுக்கு முதல் குறித்த ஜமாலியா பாடசாலையில் 45 லட்சம் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்ட கட்டட வேலைத் திட்டத்தின் போது பாடசாலையின் அதிபருக்கும் பாடசாலை மாணவர்களின் பெற்றோராகிய அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களாகிய எமக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டது. குறித்த வேலை திட்டத்தை பிறிதொரு பாடசாலை நிர்வாகத்தினர் செய்து விட்டு தாம் செய்ததாக கூட்டறிக்கைகளில் கையொப்பமிடும்படி பாடசாலை அதிபர் வேண்டிக் கொண்டதை தான் ஏற்றுக்கொள்ள மறுத்ததை அடுத்து இந்த முரண்பாடு ஏற்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் வலயக்கல்வி பணிப்பாளர் அலுவலகம், மாகாண கல்விப் பணிமனை, அரசியல் பிரமுகர்கள், பள்ளிவாசல் தலைவர்கள், ஊர் பிரமுகர்கள் என நாம் பலரிடமும் முறைப்பாடுகளை செய்தும் தமக்கு இதுவரை எந்தத் தீர்வும் கிட்டவில்லை.

இந்நிலையில் பாடசாலைக்கு சென்று கொண்டிருந்த எமது பிள்ளைகளின் மீது அபாண்டமான பொய் குற்றச்சாட்டுக்களை சொல்லி அவர்களை தொடர்ச்சியாக பழிவாங்கும் செயற்பாடுகள் பாடசாலையில் இடம்பெற்று வருகின்றன. எனக்கு எதிராக முறைப்பாடுகள் செய்யப்பட்டு வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில் எமது பிள்ளைகளின் புத்தகப் பைக்குள் போதைப் பொருட்களை வைத்துவிட்டு எம்மீது குற்றம் சுமத்தலாம் என்ற உள்ளச்சம், பயம் காரணமாக கடந்த 45 நாட்களாக எமது பிள்ளைகள் பாடசாலைக்கு செல்ல முடியாத நெருக்கடியான சூழல் மற்றும் மன உளைச்சல்களோடு வீடுகளுக்குள் உறைந்துபோய் உள்ளார்கள்.

கடந்த பத்து தினங்களுக்கு முன்னர் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்கள், பெற்றோர்கள், அதிபர் என அனைவருக்கும் தனித்தனியாக மாகாண கல்வி பணிப்பாளரின் விசாரணை சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெற்றது. எனினும் இதுவரை எமக்கு எதுவித தீர்வும் கிடைக்கவில்லை.

குறித்த பாடசாலையின் அமைவிடத்திற்கருகில் 150 மீட்டர் தூரத்தில் வசிக்கும் மாணவர்கள் பிறிதொரு பாடசாலைக்கு இடம் மாற்றுவதிலும் பார்க்க ஊழல் மோசடியில் சிக்குண்டு தவிக்கும் பாடசாலையின் அதிபரை குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை நடாத்தி தீர்வை பெற்றுத் தரும் வரை வேறு ஒரு பாடசாலைக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யுமாறு நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.

எமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வை பெற்றுத் தராத பட்சத்தில் தமது பிள்ளைகளும் நாமும் கல்வி உரிமையை பெற்றுக் கொள்வதற்காக சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்திற்கு முன்னால் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு தயாராக உள்ளோம் என்றும் இந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட மாணவர்களின் பெற்றோர்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.








# வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

**எம்.ஜி.எம்.நாஸர்**





வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்புக் கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மட்டக்களப்பு – ஏறாவூர்ப் பிரதேசத்தில் கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

இதையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏறாவூர் மண்ணில் தரிக்காது மட்டக்களப்பு நகரம் நோக்கி பயணம் செய்தனர்.
சமூக செயற்பாட்டாளர் ஏ.எம். பிர்தௌஸ் தலைமையில் ஏறாவூர் மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியில் இந்த கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்றது. கவனயீர்ப்பு போராட்டக்காரர்கள் தேசியக் கொடியை ஏந்தியவாறு மௌனமாக தமது எதிர்ப்பினை வெளியிட்டனர்.
முப்பது பஸ் வண்டிகளில் வடக்கு மாகாணத்திலிருந்து கிழக்கு மாகாணம் நோக்கி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பு முதலான பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து சிவில் சமூகம் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றிணைந்து இந்த ஆர்ப்பாட்ட பவனியை முன்னெடுக்கப்பட்டது.






அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலையில் மருத்துவ உபகரணங்கள் மற்றும் தளபாடங்களைக் கையளிக்கும் நிகழ்வு வைத்தியசாலை குழுத் தலைவர் டாக்டர். எம்.ஏ.றக்கீஸ்து தலைமையில் (28) நடைபெற்றது.

இந்நிகழ்வில், வைத்திய சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் ரஜவெல்லே சுபூதி தேரர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். மேலும் மருத்துவ உபகரணங்கள் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்கும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடதக்கது.

**படம்: சியாத் .எம்.இஸ்மாயில், கே. மாதவன்**

## பேரினவாதம் முஸ்லிம் சமூகத்தை தீண்டி தோல்வியடைந்த நிலை

**றியாஸ் இஸ்மாயில்**





பேரினவாதம் முஸ்லிம் சமூகத்தை தீண்டி தோல்வியடைந்த விடயத்தை யாரும் எழுதில் மறந்து விட முடியாது என கிழக்கு மாகாண முன்னால் அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதி தேர்சிய அமைப்பாளருமான எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அட்டாளைச்சேனை அறபா வட்டாரத்தின் அட்டாளைச்சேனை கோணாவத்தை கிராமத்தின் கிளை புனராமைப்பு கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஒரு புறம் பேரினவாதம் முஸ்லிம் சமூகத்தை தீண்டி தோல்வியடைந்த விடயத்தை யாரும் எழுதில் மறந்து விட முடியாது. மறுபுறம் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மக்களுடைய உணர்வு ரீதியான எண்ணங்களையும், உரிமைகளையும் கேட்கின்ற கால கட்டமாகும். கடந்த யுத்த காலத்தில் தமிழ் தலைமைகள், அறிஞர்கள், இளைஞர்கள் அத்துடன் அவர்களது கல்வி சொத்துக்கள மற்றும் வளங்கள் அழிக்கப்பட்டன.

தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து தங்களது பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க வேண்டும் தொங்கி நிற்கும் காலமாகும். தமிழ் பேசும் மக்களுக்குரிய தீர்வுகளை வழங்க வேண்டும் என்று சர்வதேசம் இந்த அரசசை அமிழ்த்தும் நிலையில் நடைபெறப்போகும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலானது நமது முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினதும் தலைமையினதும் பலத்தை சர்வதேச மற்றும் தேசிய ரீதியில் வெளிக்காட்ட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

நடைபெறவுள்ள உள்ளூரட்சி மன்றத் தேர்தலில் அட்டாளைச்சேனை பிரதேச சபையை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை தோல்விய டைய வைக்கும் நோக்கில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைபேசி சின்னத்தில் ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை கிராமங்களில் எமது கட்சியின் போராளிகள் மற்றும் முக்கியஸ்தர்களை வேட்பாளராக போட்டுள்ளார்.

நான் அவருக்கு சவால் விடுகின்றேன் இந்த தேர்தல் நடக்குமாயின் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் உள்ள ஆறு வட்டாரங்க ளையும் அதிகப்படியான வாக்குகளினால் நமது மரச் சின்னம் வெற்றி கொண்டு அட்டாளைச்சேனை பிரதேச சபையின் ஆட்சி அதிகாரம் நமது கட்சியை வந்து சேரும் என்பதில் எந்த ஐயமுமில்லை என தெரிவிக்கின்றேன் என்றார்.

## கல்முனை ஸாஹிரா கல்லூரியின் இடைவிலகிய மாணவர்கள் பற்றிய கலந்துரையாடல்



**அஸ்ஹர் இப்றாஹிம்**

கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியின் கல்வியிலிருந்து இடைவிலகிய மாணவர்கள் தொடர்பான கலந்துரையாடல் (08) சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில், சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் என்.எம்.அப்துல் மலீக் அதிகாரி , கல்முனை வலயக் கல்விப் பணியகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி ஆசிரிய ஆலோசகர் ஏ.றாஸிக் , கல்லூரியின் அதிபர் எம்.ஐ.ஜாபிர் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர், பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி பிரிவின் உறுப்பினர்கள், கிராம சேவகர்கள், கல்லூரியின் பிரதி அதிபர், பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் டொக்டர் டில்ஸான் நிஸாம் ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர்.

இக்கூட்டத்தின்போது, பாடசாலைக் கல்வியிலிருந்து இடைவிலகிய மாணவர்கள் தொடர்பான மேலதிக தரவுகளை, பிரதேச செயலாளரின் பணிப்புரைக்கமைய கிராம சேவகர்கள் முன்னரே திரட்டியிருந்த நிலையில், அவை இக்கூட்டத்தில் விரிவாக பகுப்பாய்வுக்குட் படுத்தப்பட்டது.



நேற்று வியாழக்கிழமை (09) முதல் அரச பணியிலிருந்து ஓய்வுபெறும் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக பதிவாளர் எச்.அப்துல் சத்தாருக்கு இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழக வேலைகள் மற்றும் பராமரிப்புப் பிரிவினரின் ஏற்பாட்டில் சேவை நலன் பாராட்டு விழா பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. (படம்: நூருல் ஹுதா உமர்)

## சமுர்த்தி முகாமையாளர் இமாமுதீனின் பிரியா விடையும் கௌரவிப்பும்



**எம்.எப்.நவாஸ்**

அட்டாளைச்சேனை மற்றும் ஏனைய பிரதேச செயலகங்களில் 30 வருடங்களாக சேவை செய்து ஓய்வுபெற்று சென்றுள்ள சமுர்த்தி முகாமையாளர் எம்.ஏ.இமாமுதீனின் பிரியா விடையும் கௌரவிப்பு வைபவமும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் முன்னணியின் தலைவர் எம்.எப்.எம்நவாஸ் தலைமையில் அட்டாளைச்சேனை பீச் ஹோலில் இடம் பெற்றது.

இதில் பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ அஹமட் சாபீர் பிரதம அதிதியாகவும் விசேட அதிதியாக உதவி பிரதேச செயலாளர் நஹிஜா முசாபிர் ஏனைய அதிதிகளாக தலைமைப் பீட சமுர்த்தி முகாமையாளர் ஏ.எம். ஹமீட் மற்றும் ஏனைய முகாமையாளர்களும், நிர்வாக உத்தியோகத்தர், உதவி திட்ட பணிப்பாளர் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# பாகிஸ்தான் - இலங்கை

## இராஜதந்திர உறவின் 75 ஆண்டு நிறைவு நிகழ்வு



பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உமர் பாரூக் புர்கி, பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 75 ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில், அஹங்கம ரோஹன கல்லூரி மாணவர்களுக்கான கிரிக்கெட் உபகரணங்களை வழங்கி வைத்தார்.

மேலும் இளம் கிரிக்கெட் ரசிகர்களுடன் நட்பு ரீதியிலான போட்டியிலும் பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உமர் பாரூக் புர்கி கலந்து கொண்டார்.

கிரிக்கெட் விளையாட்டு பாகிஸ்தானுக்கும் இலங்கை இளைஞர்களுக்கும் இடையே ஒரு பிணைப்பு காரணியாகும் என பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் தெரிவித்தார்.

பாக்கிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம் எப்போதும் இரு நட்பு நாடுகளின் பொதுமக்களிடையே குறிப்பாக இளைஞர்களிடையே இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் எனவும் தெரிவித்தார்.





# பாகிஸ்தான் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் ஹினா ரப்பானி கார் இலங்கை விஜயம்!



இலங்கையின் வெளிவிவகார அமைச்சரின் அழைப்பின் பேரில், பாகிஸ்தானின் வெளிவிவகார அமைச்சர் ஹினா ரப்பானி கார் (03) இலங்கையின் 75 ஆவது சுதந்திர தின விழாவில் கலந்து கொள்வதற்காக இலங்கைக்கு விஜயம் செய்தார்.

பங்களாதேஷ், நேபாளம், மாலத்தீவுகள், இந்தியா, ஜப்பான் மற்றும் பூடான் ஆகிய நாடுகளின் அமைச்சர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கலாசார நிகழ்வு மற்றும் சுதந்திர தின வைபவத்தில் கலந்து கொள்வதற்கு மேலதிகமாக, இராஜாங்க அமைச்சர் இலங்கை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோரையும் சந்தித்தார்.

இராஜாங்க அமைச்சர் மற்றும் பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் மற்றும் ஜப்பானின் வெளிவிவகாரங்களுக்கான பாராளுமன்ற துணை அமைச்சர் ஆகியோருக்கு இடையிலான இருதரப்பு சந்திப்புகளும் இடம்பெற்றன.

இராஜாங்க அமைச்சர் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாட்டின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு கௌரவித்தார்.


ஜனாதிபதியாக பதவியேற்றதற்கு வாழ்த்து தெரிவித்த அவர், அவரது திறமையான தலைமையின் கீழ் நாடு முன்னேறும் மற்றும் செழிக்கும் என்று நம்புகிறேன். இந்த கடினமான காலங்களில் இலங்கை அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் பாகிஸ்தானின் முழு ஆதரவை அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ரணில் பாகிஸ்தான் இராஜாங்க அமைச்சருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன், இலங்கை கொண்டாட்டங்களில் அவர் பங்கேற்பது இரு நாடுகளுக்கும் இடையிலான சகோதர உறவுகளை பிரதிபலிக்கிறது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டினார்.

இலங்கை பிரதமருடனான இராஜாங்க அமைச்சரின் சந்திப்பில், சுதந்திர தின கொண்டாட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட விருந்தோம்பல் மற்றும் சிறந்த ஏற்பாடுகளை இராஜாங்க அமைச்சர் தினேஷ் குணவர்தனவை பாராட்டினார். இந்த சந்திப்பின் போது இருதரப்பு ஒத்துழைப்பு தொடர்பான பரஸ்பர நலன்கள் குறித்து ஆராயப்பட்டது.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பின் போது, சுதந்திர தின விழாவில் பங்கேற்க அழைப்பு விடுத்தமைக்கு இராஜாங்க அமைச்சர் அலி சப்ரிக்கு நன்றி தெரிவித்துள்ளார். பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம், வர்த்தகம் மற்றும் முதலீடு ஆகியவற்றில் ஒத்துழைப்பு மற்றும் மக்களிடையேயான தொடர்பு உள்ளிட்ட பல்வேறு இருதரப்பு விவகாரங்கள் குறித்து இரு அமைச்சர்களும் கலந்துரையாடினர்.

இந்த விஜயத்தின் போது, இராஜாங்க அமைச்சர் பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் டாக்டர் ஏ.கே. அப்துல் மொமன், மற்றும் ஜப்பானின் வெளிவிவகாரங்களுக்கான பாராளுமன்ற துணை அமைச்சர் /ன்சுகே டேகி ஆகியோர் இலங்கையின் சுதந்திர தின விழாவில் கலந்துகொண்டனர்.







SPORTS லீடர்

sportsml77@gmail.com






# 86 வருடங்களுக்கு பின்னர் இடம்பெற்ற

## கல்முனை அஸ்–ஸுஹறா வித்தியாலய இல்ல விளையாட்டு போட்டியில்

# பேர்ல்ஸ் இல்லம் சம்பியன்

–எம்.என்.எம்.அப்ராஸ்–

கல்முனை அஸ்–ஸுஹறா வித்தியாலயத்தில் சுமார் 86 வருடங்களுக்கு பின்னர் இடம்பெற்ற இல்ல விளையாட்டு போட்டியில் பேர்ல்ஸ் இல்லம் –341 புள்ளி களைப் பெற்று (மஞ்சள் நிறம்) சம்பியனானது.

கல்முனை அஸ்–ஸுஹறா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டு போட்டியின் இறுதி நிகழ்வுகள் கல்முனை கடற்கரை வீதியில் உள்ள பலாஹ் மைதானத்தில் அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜீதியா தலைமையில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம், கௌரவ அதிதியாக கல்முனை வலயக் கல்வி அலுவலக உடற் கல்வி பிரிவின் உதவிக் கல்வி பணிப்பாளர் யூ. எல். எம். சாஜீத், மற்றும் அதிதிகளாக கல்முனை மாநகர பிரதி முதல்வரும், கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பின் ஸ்தாபகத் தலைவருமான ரஹ்மத் மன்சூர், கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஆரிகா காரியப்பர் சுகாதார சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர் ஐ.எல். எம். இப்ராஹீம், பாடசாலைகளின் அதிபர்கள்,ஆகியோர் கலந்து கொண்டனர்.

இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள், மைதான கண்காட்சி, வினோத உடை நிகழ்வுகள் இடம் பெற்றதுடன் போட்டிகளின் வெற்றி பெற்ற














மாணவிகளுக்கு சான்றிதழ்கள்,பதக்கங்கள் வெற்றிக் கிண்ணங்கள் என்பன கலந்து கொண்ட அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டது.

இல்லங்களின் வெற்றி முறையே பேர்ல்ஸ் இல்லம் –341 புள்ளிகளைப் பெற்று (மஞ்சள் நிறம்) முதலாமி டத்தையும், எமிரெட் இல்லம்–326 (பச்சை நிறம்) புள்ளிகளைப் பெற்று இரண்டாமி டத்தையும், டைமன்ட் இல்லம்–322(நீல நிறம்) புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இதன்போது பிரதி, உதவி அதிபர்கள் ஆசிரியர்கள், கல்முனை வலயக் கல்வி அதிகாரிகள்,கோட்டக் கல்வி அதிகாரிகள்,பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், இல்ல விளையாட்டுப் போட்டிகளுக்கான மத்திய குழு உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், பிரமுகர்கள், பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.